ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1809/13 - 2013 මැයි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.05.09
*1809/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச்சட்டம்*

*3ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இவ்வட்டவணையில் நிரல் I இல் குறிப்பிட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.*

*2013, ஏப்பிறல் 23.*

**அட்டவணை**

*பெல்மதுளை நகர அபிவிருத்திப் பகுதி*

*நிரல் I*

*சப்பிரகமுவை மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கி.சே.பி.இல. 171C தொம்பகஸ்வின்னை, கி.சே.பி. இல.171B கொடகமை, கி.சே.பி.இல. 167 கனேகமை, கி.சே.பி.இல. 166 குட்டப்பிட்டி, கி.சே.பி.இல.166A உடதுல, கி.சே.பி.இல. 168C வாரிகமை, கி.சே.பி.இல. 168 தெனவகஉடகட, கி.சே.பி.இல. 168D பொரல, கி.சே.பி.இல. 168A பெல்மதுளை நகரம், கி.சே.பி. இல. 170 பனவென்ன, கி.சே.பி.இல. 170C கப்புஹென்தோட்டை, கி.சே.பி. இல: 167B மேல் போபிட்டி, கி.சே.பி.இல. 168 B பெல்மதுளை கம, கி.சே.பி.இல. 167D கீழ்போபிட்டி, கி.சே.பி.இல. 167C றில்ஹேன, கி.சே.பி.இல. 171 தெனவக்கை பாத்தகடை, கி.சே.பி.இல. 171A சன்னஸ்கம ஆகிய சகல காணிப்பகுதிகளும், இதன் நேரொத்த நிரல் II இல் உள்ள எல்லையும் வரையறைகளாலும் வரைவிலக்கணப்படுத் தப்பட்டுள்ளது.*

*நிரல் II*

*வடக்கு:*

*சன்னஸ்சகம கி. சே. பிரிவின் தெற்கு எல்லையும் பலுகம் மானை வீதியின் நடுக்கோடும் சந்திக்கும் புள்ளியிலிருந்து பலுகம்மான வீதியின் நடுக்கோட்டோரமாக கிழக்கேயும் மற்றும் வடமேற்கேயுமாக கீறப்பட்ட கோடானது இரத்தினபுரி - பலாங்கொடை பிரதான வீதியின் நடுக்கோட்டை சந்திக்கும் வரை, மேலும், இப்புள் ளியிலிருந்து தென்கிழக்கே இரத்தினபுரி - பலாங்கொடை பிரதான வீதி நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தொம்பகஸ்வின்ன வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தொம்கஸ்வின்ன வீதியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கே, தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே கீறப்பட்ட கோடானது தெனவக்கே ஆற்றைக் கடந்து மேலும் வடக்கே தொம்பகஸ்வின்ன வீதியின் நடுக்கோட்டோரமாக சென்று தும்பதெனியா சந்தியினை அடையும் வரை; பின்பு, தும்பதெனியா வீதியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கே, தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே கீறப்பட்ட கோடானது*

;



இன் அருவி வினது நடுக்கோட்டை அடயும் வரை; பின்பு, இன் அருவியினது நடுக்கோட்டோரமான தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது கலமுனை அருவியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, கலமுனை அருவியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கே கீறப்பட்ட கோடானது தெனவக்கை வீதியின் நடுக்கோட்டை அடையும்வரை; பின்பு, தெனவக்கை வீதியின் நடுக்கோட்டோரமாக தெற்கே மற்றும் தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது வெலந் துறாகொடை வீதியின் நடுக்கோட்டை அடையம் வரை பின்பு வெலந்துறாகொடை வீதியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கே கீறப்பட்ட கோடானது கனேகம கிராமசேவகர் பிரிவின் வடக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, கனேகம கிராம சேவகர் பிரிவின் வடக்கு எல்லையோரமாக தென்கிழக்கே, வடகிழக்கே, மற்றும் தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது, கனேகம கிராம சேவகர் பிரிவின் கிழக்கு எல்லையை அடையும்வரை; பின்பு கனேகம கிராம சேவகர் பிரிவின் கிழக்கு எல்லையோரமாக தெற்கே கீறப்பட்ட கோடானது பெல்மதுளை நகர கி. சே. பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் வரை; பின்பு, பெல்மதுளை நகர கி.சே. பிரிவின் வடக்கு எல்லையோரமாக கிழக்கே கீறப்பட்ட கோடானது, பெல்மதுலகம கி.சே.பிரிவின் வடக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, பெல்மதுளை கி.சே. பிரிவின் வடக்கு எல்லையோரமாக வடகிழக்கே கீறப்பட்ட கோடானது பெல்மதுளைகம கி.சே. பிரிவின் கிழக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, பெல்மதுளைகம கி.சே. பிரிவின் கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது தெனவக்க உடகட கி.சே. பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் வரை; பின்பு, தெனவக்க உடகட கி.சே. பிரிவின் வடக்கு எல்லையோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது கும்புக்க அருவியினது நடுக்கோட்டை அடையும்வரை; பின்பு கும்புக்க அருவியினது நடுக்கோட்டோரமாக தென்மேற்கே கீறப்பட்ட கோடானது தெனவக்க இயற்கைக் கால்வாயினது நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தெனவக்க இயற்கைக் கால்வாயினது நடுக்கோட்டோரமாக கிழக்கே கீறப்பட்ட கோடானது, மொறதொட்ட கி.சே. பிரிவின் வடக்கு எல்லையினை அடையும்வரை; பின்பு, மொறதொட்ட கி.சே.பிரிவின் வடக்கு எல்லையோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது வெனிவெல்பிட்டி வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை;

*கிழக்கு:*

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கெற்றதன்ன-பொறல வீதியின் நடுக்கோட்டோரமாக தென்கிழக்கே மற்றும் தென்மேற்கே பெல்மதுளை-பலாங்கொடை பிரதான வீதியைக் கடந்து கீறப்பட்ட கோடானது இரத்தினபுரி-எம்பிலிபிட்டி பிரதான வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, பெல்மதுளை-எம்பிலிபிட்டி பிரதான வீதியின் நடுக்கோட்டோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது பொறொனுவை-கெற்றதென்ன வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை;

*தெற்கு:*

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கப்புஹென்தோட்ட கி.சே. பிரிவின் தெற்கு எல்லையோரமாக மேற்கே கீறப்பட்ட கோடானது கப்புஹென்தோட்டை கி.சே. பிரிவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, கப்புஹென்தோட்டை கி.சே. பிரிவின் மேற்கு எல்லையோரமாக வடமேற்கே கீறப்பட்ட கோடானது இஹலபோபிட்ட கி.சே.பிரிவின் தெற்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, இஹலபோபிட்ட கி.சே.பிரிவின் தெற்கு எல்லையோரமாக வடக்கேயும், தென்மேற்கேயமாக கீறப்பட்ட கோடானது இஹலபோபிட்ட கி.சே. பிரிவின் மேற்கு எல்லையை அடையும் வரை;

*மேற்கு:*

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இஹலபோபிட்டி கி.சே. பிரிவின் மேற்கு எல்லையோரமாக வடமேற்கே, வடக்கே மற்றும் வடமேற்கே கீறப்பட்ட கோடானது றில்ஹேன கி.சே. பிரிவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, றில்ஹேன கி.சே. பிரிவின் மேற்கு எல்லையோரமாக வடமேற்கே மற்றும் வடகிழக்கே கீறப்பட்ட கோடானது தெனவக்கை பாத்தகட கி.சே. பிரிவின் கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு தெனவக்கை பாத்தகட கி.சே. பிரிவின் தெற்கு எல்லையோரமாக வடமேற்கே கீறப்பட்ட கோடானது தெனவக்கை பாத்தகட கி.சே.பிரிவின் வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு தெனவக்கை பாத்தகட கி.சே. பிரிவின் வடக்கு எல்லையோரமாக வடகிழக்கே கீறப்பட்ட கோடானது சன்னகஸ்கம கி.சே. பிரிவின் தெற்கு எல்லையைச் சந்திக்கும் வரை; பின்பு, சன்னகஸ்கம கி.சே. பிரிவின் தெற்கு எல்லையோரமாக மேற்கே கீறப்பட்ட கோடானது பலுகம்மானை வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை.

*5-619*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.